ஆசிரியர் கல்லூரிக்

கலைச் சொற்கள்

ஆக்கியோர் :

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்,

திருநெல்வேலி.

குறைக ... ...ார்ச்சி ஆராய்ச்சி

மன்றத்தி... ...காள்ளப்படுகிற.

வெளியிடுவோர் :

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்,

சென்னை அரசாங்கம்.

ஆசிரியர் கல்லூரிக்

கலைச் சொற்கள்

ஆக்கியோர்:

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்,

திருநெல்வேலி.

வெளியிடுவோர்:

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்,

சென்னை அரசாங்கம்.

முதற் பதிப்பு—1000 படிகள்—1959

சண்முகம் அச்சகம் பிரைவேட் லிமிடெட், சென்னை—1.

பதிப்புரை

"ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்க"ளாகிய இந்நூல் 4-2-1959-ல் கவர்னர் திரு. பிஃச்ட்ணுராம் மேதி அவர்கள் தலைமையில் கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால் வெளியிடப் பெற்றது. கலைச்சொல்லாக்கக் கழகத்தினுக்குத் தலைமை தாங்கி இனிது நிறைவு செய்து தந்ததுடன் இந்நூலுக்கு முகவுரையும் வழங்கிய பெரியார் தமிழகக் கல்வி இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர் களாவர். சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. மு. இராம. பெருமாள் முதலியார் அவர்கள் சொல்லாக்கத்திற்குப் பேருதவி புரிந்தார்கள். சொல்லாக்கத்தில் நிகழ்ந்துள்ள செலவனைத்தினையும் சென்னை அரசாங்கம் வழங்கியருள்கின்றது.

அனைவருக்கும் நன்றி பெரிதே.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்,
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்.

திருநெல்வேலி,
25—5—1959.

நமது சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

பட்டங்களைச் செப்புப் பட்டயங்களுடன் பல பெரியாருக்கு வழங்கி வருகிறது :

பட்டம் பெற்ற பெரியார்களும் பெற்ற பட்டங்களும் பின்வருமாறு :—

1. தி. இலட்சுமணப் பிள்ளையவர்கள்—இசைத் தமிழ்ச் செல்வர், இசைக் கவியரசு.
2. வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்—தமிழ்ப்பெருங் கவி, முதுப்பெரும் புலவர்.
3. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்—பல்கலைப் புலவர்.
4. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்—முதுபெரும் புலவர்.
5. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்—நாவலர்.
6. கோவை க. சுப்பிரமணிய முதலியாரவர்கள்—சிவக் கவிமணி.
7. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்—தமிழ்க் கவிமணி.
8. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள்—சித்தாந்தப் பேராசிரியர்,
   சித்தாந்த முதுபெரும் புலவர்.
9. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்—சித்தாந்தப் பேராசிரியர்.
10. சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்கள்—தமிழிசை மணி.
11. கா. சங்கரன் பிள்ளையவர்கள்—தமிழிசைமணி.
12. கீவளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்—இசைத் தமிழ்ச்செல்வர்.
13. அரசர் சர். மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்—பல்கலை வள்ளல்.
14. கோவை ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்—செந்தமிழ்ப் புரவலர்.
15. அமைச்சர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்—தமிழ்ப்பெரும் புலவர்.
16. ஆ. அருளப்பனவர்கள்—தமிழ்ப்பெரும் புலவர்.

முன்னுரை

ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் பொதுக் கல்வி நிலையங்கள் அல்ல. அவை குறிப்பிட்டதொரு தொழிலுக்குப் பயிற்சிதரும் கல்வி நிலையங்கள் ஆகும். ஆசிரியர் கல்லூரிகளிற் படித்துப் பட்டம்பெறும் ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை செய்ய வேண்டியவர்கள். அவ்வுயர்நிலைப் பள்ளிகளின் பாடமுறைகளுக்கும் பயிற்றுமொழிக்கும் ஏற்பவே ஆசிரியர் கல்லூரிகளின் பாடமுறைகளும் பயிற்றுமொழியும் அமைய வேண்டும். எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பித்தல் முடியுமா முடியாதா என்ற கல்லூரிப் பொதுக்கல்வி பற்றிய ஐயத்திற்கு இங்கு இடமில்லை. அந்தக் கேள்விக்கு விடை எதுவானாலும், உயர்நிலைப்பள்ளிக் கல்வி தாய்மொழி வழியாகவே கற்பிக்கப்பெறும்போது, அத்தொண்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பெறும் பயிற்சியும் அதே மொழியில் இருந்தாலன்றிப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் தங்களுடைய தொண்டிற்கு இன்றியமையாத தகுதியோடு வெளியேறுதல் இயலாது.

இவ்வாறு ஆசிரியர் கல்லூரிகளில் தமிழ்மொழியே பயிற்றுமொழியாகும் தகுதி பெறல் வேண்டுமெனின் அதற்கேற்ற கலைச்சொற்கள் தேவை யென்பது வெள்ளிடைமலையெனத் தெள்ளிதின் விளங்கும்.

ஆசிரியர் கல்லூரிகளுக்கான கலைச் சொற்களைத் தொகுத்துத் தரும் பொறுப்பைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ஏற்றுக்கொண்டது. அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக ஒரு குழு அமைக்கப்பெற்றது. அக்குழுவின் உறுப்பினர் பட்டியலைப் பிறிதோரிடத்திற் காணலாம். சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிற் பணியாற்றும் ஆசிரியர்களிற் பெரும்பாலோர் இக்கலைச் சொல்லாக்கக் குழுவிலும் உறுப்பினர்கள் என்பது உறுப்பினர் பட்டியலிலிருந்து தெரியும். அவர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் கலைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களையும் தொகுத்துக் கலைச் சொல்லாக்கக் குழுவின் அடிப்படை வேலையைச் செய்து உதவினார்கள். இளங்கலை ஆசிரிய (B. T.) வகுப்புக்குரிய விருப்பப் பாடங்களை ஏற்கனவே தமிழ்வழிக் கற்பித்துப் பெற்ற பட்டறிவு அவர்களுக்கு இப்பணியிற் பெரிதும் உதவியது. அவர்கள் தொகுத்துக்கொடுத்த கலைச் சொற்களின் அகர வரிசையைக் கலைச் சொல்லாக்கக் குழு **21-3-57**ல் தொடங்கி நாடோறும் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிற் கூடி **31-3-57** முடிய ஆய்ந்தது. மேலும் பலருடைய கருத்துக்களைப் பெற்றால் நல்ல பயன் ஏற்படும் என்று உணர்ந்த கலைச் சொல்லாக்கக் குழு கலைச் சொல் அகரவரிசையினை அச்சிட்டுப் படிகளைப் பல ஆசிரியர் கல்லூரிகளுக்கும் வேறுபல அறிஞர்களுக்கும் அனுப்பி அவரவர்களுடைய கருத்துக்களைக் கூறுமாறு அழைப்பு விடுத்தது. கல்லூரிகள் பலவும் கலைச் சொற்களை ஊன்றிப் படித்து ஆழ்ந்து சிந்தித்துப் பல திருத்தங்களை அனுப்பி உதவின.

அதன் பின்னர், கலைச் சொல்லாக்கக் குழு 1958ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் தொடங்கித் திசம்பர்த் திங்கள் முடிய அவ்வப்போது பல நாட்கள் கூடித் திருத்தங்களை ஆய்ந்து, ஏற்றுக்கொள்ளத் தக்கவற்றை ஏற்றுக் கொண்டு, ஆட்சிச் சொல் அகரவரிசையிலும் ஒருங்கே கண்ட பல பொதுச் சொற்களையும் ஒப்புநோக்கி, முடிவாக இக்கலைச் சொல் அகர வரிசையை உறுதிப்படுத்தியது.

உள்ளது சிறத்தலின் வழியாகவே முன்னேற்றம் காண முடியுமாதலால் ஆசிரியத்தோழர்கள் இச்சொற்களைப் பயன்படுத்தி, அதன்மூலம் அவர்கள் காணும் தெளிவுகளையும் திருத்தங்களையும் தெரிவித்தால், அதன் பின்னர் மீண்டும் இவ்வகர வரிசையைச் செப்பனிட முடியும்.

இந்நூல் பலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று என்று இக் குழு நம்புகிறது.

இந்த நற்பணியிற் கைகொடுத்த அனைவருக்கும் தமிழகத்தின் நன்றி உரித்தாகும்.

நெ. து. சுந்தரவடிவேலு,
மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர்,
தலைவர்,
ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கக் குழு.

சென்னை,
31—1—1959.

ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கக் குழு

தலைவர் :

திரு. நெ. து. சுந்தரவடிவேலு,
மாநிலக்கல்வி இயக்குநர், சென்னை.

துணைத்தலைவர் :

திரு. மு. இராம. பெருமாள் முதலியார்,
முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதை.

அமைச்சர் :

திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

உறுப்பினர் :

1. திரு. S. பழநிச்சாமி
2. ,, S. V. சிட்டிபாபு
3. ,, ச. ஆறுமுக முதலியார்
4. ,, கே. ஆர். அப்புள்ளாச்சாரி
5. ,, V. S. இராமாநுசம்
6. ,, என். கிருஷ்ணசாமி ஐயர்
7. ,, எ. இ. சுப்பிரமணியம்
8. ,, க. கோவிந்தராசன்
9. ,, ஆர். திருஞான சம்பந்தம்
10. ,, பி. தங்கவேலு
11. ,, ந. பார்த்தசாரதி
12. ,, வி. கிருட்டினமூர்த்தி
13. ,, என். வேதமணி மனுவேல்
14. ,, ஃப்ரெடரிக் ஆப்பர்
15. ,, க. சம்பத்
16. ,, கே. எம். கே. காதர்
17. ,, S. வாசுதேவன்
18. ,, க. வைத்தியநாதன்
19. ,, கே. ஏ. இராமநாதன்
20. ,, வி. ஆனந்தராசர்
21. ,, இ. கே. வரதன்
22. குமாரி ஆர். இந்திராதேவி
23. ,, லீலா அப்ரகாம்
24. ,, பி. அகல்யாபாய்
25. ,, இராசரத்தினம்மாள்
26. திரு. ஞானப்பிரகாசம்
27. ,, நெ. சு. தையல்பாகம்
28. ,, சி. சீனிவாசன்
29. ,, S. கிருஷ்ணசாமி ஐயர்
30. ,, அ. பன்னீர்செல்வம்
31. ,, P. S. தேவிட் சோசுப்
32. ,, சொக்க. அமிருத கணேச முதலியார்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

ஆசிரியர் கல்லூரிச் சொற்கள்

வெளியீட்டு விழா அறிக்கை

நூல் வெளியீடும் பரிசளிப்பும்

தோற்றுவாய்

திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் ஒரு தமிழர் மாநாடு கூட்டித் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவவேண்டும் என்ற எண்ணத்துடன் திருநெல்வேலிக்கு வந்து 25—11—1933-இல் திருவாளர்கள் தாசில் மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், தாகூர்ச் சட்ட விரிவுரையாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள் இம்மூவருடன் கலந்து பேசி அங்ஙனமே தீர்மானித்தார்கள். 7—1—1934-இல் வரவேற்புக் கழகம் அமைக்கப் பெற்றது. வள்ளுவர் யாண்டு 1965 வைகாசித் திங்கள் 28, 29 (1934 சூன் 10, 11) ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டு நாட்களிலும் சென்னைமாகாணத் தமிழர் முதலாவது மாநாடு திருநெல்வேலி இந்துக் கல்லூரியிற் கூடிற்று; அதனைத் தொடங்கிவைத்தவர் அந்நாள் அமைச்சர் பொன்னம்பல தியாகராசன் அவர்கள்; அதன் தலைவர் செந்தமிழ்ப் புரவலர் த. வே. உமாமகேசுவரன் பிள்ளை அவர்கள்; வரவேற்புத் தலைவர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்; மாநாட்டு அமைச்சர்கள் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் பு. சி. புன்னைவன நாத முதலியார் அவர்களும் ஆவர். புலவர் மாநாடு ஒன்றும் நடைபெற்றது. அதன் தலைவர் அருட்டிரு மறைமலை அடிகளார்; வரவேற்புத் தலைவர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள். அந்த மாநாட்டிலே தோன்றி உடனே பதிவு செய்யப்பெற்று விளங்குவதே நம் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்.

நம் சங்கம் தொடங்கி இருபத்துநான் காண்டுகள் கழிந்து இப்போது இருபத்தைந்தாவது ஆண்டு தொடங்கி நடந்துவருகிறது. இதுவரை நமது சங்கம் செய்துள்ள சிறந்த பணிகள் பின் வருவன :

(1) சென்னை, திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் முதலிய பல இடங்களில் பதினைந்து தமிழர் மாநாடுகளையும் எட்டுப் புலவர் மாநாடுகளையும் கூட்டியிருக்கிறது.

(2) முதல் மூன்றுண்டுகளில் ''தமிழ்த்தாய்'' என்ற முத்திங்கள் வெளியீட்டை வெளியிட்டு வந்தது.

(3) திருநெல்வேலியில் நான்காண்டுகள் "தமிழ்க்கல்லூரி" ஒன்றை மிகவும் வெற்றியாக நடத்திவந்தது. நம் நாட்டு வேளாண்மை அமைச்சராகவும் பின் முதலமைச்சராகவும், அதன்பின் ஒரிசா நாட்டு ஆளுந (Governor) ராகவும் இருந்த திரு. பூ. ச. குமாரசாமி ராசா அவர்களால் அக்கல்லூரி தொடங்கிவைக்கப் பெற்றது. மூன்றுவது படிவம் முடியப் படித்து நான்கு ஐந்து ஆருவது படிவங்களையே பார்த்தறியாதவரும்கூட அதிற் சேர்த்துக் கொள்ளப் பெற்றுர்கள். ஒரே ஓராண்டுமட்டும் கற்றவுடன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்திய மெட்றிகுலேசன் ஆங்கிலமும் இன்டர்மீடியேட்டுத் தமிழும் (பகுதி 2) ஆகிய இரண்டு தேர்வுகளிலும் தேர்ந்து இண்டர்மீடியேட்டு வகுப்பில் "டி" பகுதியிற் சேர்த்துக் கொள்ளப் பெற்றுர்கள். அவர்கள் அவ்வகுப்பிலும் தேறிச் சிலர் பி.ஏ.,ப் பட்டமும் பெற்றிருக்கிறுர்கள்.

(4) சென்னை இந்து அறநிலையப் பாதுகாவற் கழகத்தார் துணையைக் கொண்டு திருநெல்வேலியில் மூன்றுமாதம் சமயவிரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரியை வெற்றியாக நடத்தியிருக்கிறது.

(5) தமிழ்நாடு சித்தவைத்திய சங்கத்துடன் சேர்ந்து 1957-ல் திருநெல்வேலியில் தமிழ் நாடு சித்தவைத்திய மாநாட்டை நடத்தியது. அதன் விளைவாக இந்து அறநிலையத் துறையினர் திருக்குற்றுலத்தின் அருகேயுள்ள பண்புளியில் சித்தவைத்திய ஆராய்ச்சி மன்றம் ஒன்றினைத் தொடங்கியிருக்கிறுர்கள்.

(6) பட்டங்களைச் செப்புப் பட்டங்களுடன் பல பெரியார்களுக்கு வழங்கிவருகிறது.

(7) உயர் பள்ளிகளுக்குரிய எல்லாப் பாடங்களுக்கும் கலைச் சொற்களையும், தமிழாட்சிக்குரிய தமிழாட்சிச் சொற்களையும், ஆசிரியர் கல்லூரிகளுக்குரிய கலைச் சொற்களையும் ஆக்கி அமைத்திருக்கிறது. இதுபற்றிய விவரங்களைக் கீழே குறிப்பிடுவோம்.

நம் கலைச்சொல்லாக்கமும் அரசாங்கமும்

உயர்பள்ளிக் கலைச்சொற்கள்

சங்கம் தொடங்கிய அன்று தொட்டுக் கலைச்சொல்லாக்கத்தில் ஈடுபட்டு அதற்கென்றே நான்கு பெரிய மாநாடுகள் நடத்தி 1938-ல் 'கலைச்சொற்கள்' என்ற நூலைச் சென்னை, திருவாங்கூர் ஆகிய பல்கலைக்கழகங்களின் பொருளுதவி கொண்டு வெளியிட்டது. சென்னை அரசாங்கம் அந்நூலைப் பாராட்டி மாகாணப் பொதுக் கல்வி இயக்குநர் (Director of Public Instruction) வழியாகக் (எண் 45290 B-3; 9-11-1938) தமிழ் நாட்டிலுள்ள உயர் நிலைப்பள்ளிக்களுக்கெல்லாம் அரசாங்கச் செலவில் ஒவ்வொரு படி வாங்கி அனுப்பி, அச்சொற்களை ஆசிரியர்கள் பயன்படுத்திக் கணக்கு, பூதநூல், வேதிநூல், உடலியலும் நலவழியும், பயிர்நூல், வரலாறு, வேளாண்மை ஆகிய பாடங்களை யெல்லாம் கற்பித்தல் வேண்டும் என்று சுற்றுணை அனுப்பியது. அவ்வாண்டில் இராசபாளையத்தில் நடைபெற்ற தமிழ் நாட்டுக்காங்கிரசு மாநாடு நமது சங்கப் பணியைப் பாராட்டித் தமிழ் மக்கள் அனைவரும் சங்கத்துக்குப் பெருந்துணை புரியவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. உயர் திருவாளர்கள் சாமி விபுலானந்தர் அவர்கள், இராசகோபாலாச்சாரியார் அவர்கள், M. S. சபேச ஐயர் அவர்கள், N. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், சா. கோ. மணவாள இராமாநுசம் அவர்கள், வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், இலங்கை K. S. இராமசாமி ஐயர் அவர்கள் முதலிய தலைவர்கள் முறையே வேதி நூல், பூதநூல், பயிர்நூல், பூகோளம்

உடலியலும் நலவழியும், வேளாண்மை, கணக்கு ஆகிய குழுக்களுக்குத் தலைமையாயிருந்து சொற்களை ஆக்கித் தந்தார்கள். திருத்தங்கள் உதவிய பல்லோருள்ளும் கோயமுத்தூர் மாவட்ட ஆசிரியர் சங்கம் முதற் பரிசினைப் பெற்றது.

1946-லும் சென்னை அரசாங்கம் நமது சங்கம் குறிப்பிட்ட கலைப் புலவர்களைத் தமிழ்க்கலைச் சொல்லாக்கக் கழகத்திற் சேர்த்துக் கலைச் சொற்களைத் திருந்த ஆராய்ந்து முடிவுசெய்து வெளியிட்டுத் தமிழ் நாட்டு உயர் நிலைப்பள்ளிகளிலெல்லாம் அவைகளைப் பயன்படுத்தியே பாடங்களைக் கற்பித்தல் வேண்டுமென்று சுற்றுணை அனுப்பியது.

தமிழாட்சி மாநாடுகள்

தமிழ் நாட்டின் ஆட்சி தமிழிலே நடைபெறும் பொருட்டு அரசாங்கத்தைத் தூண்டுவதற்காக நம் சங்கம் 18-10-1953-ல் திருநெல்வேலியில் ஒரு மாநாடும், 20-12-1953-ல் சென்னையில் ஒரு மாநாடும் வெற்றியுடன் நடத்தியது. அவைகளிற் பற்பல அரசியற்கட்சித் தலைவர்களும் பெரும் புலவர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

தமிழாட்சிச் சொற்கள்

"உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி வழியாகவே பாடங்களெல்லாம் கற்பிக்கப் பெறுதல் வேண்டும்" என்ற அரசாங்க ஆணை வெற்றியாக நடைபெறும் பொருட்டு அரும்பாடுபட்டு முன்பு கலைச்சொற்களை ஆக்கிவெளியிட்டது போல, இப்பொழுதும் தமிழ்நாட்டு அரசாங்கம் ஆட்சியைத் தமிழிலே நடத்துவதற்குத் தகுந்த துணைபுரியும் பொருட்டுத் தமிழாட்சிச் சொற்களை நமது சங்கம் அரசாங்கத்துக்கு ஆக்கித்தந்திருக்கிறது. 11-4-1955-ல் திருநெல்வேலியில் முன்னாள் நீதிபதி தா. கோமதி நாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் ஆட்சிச் சொல்லாக்கக் கழகம் அமைக்கப் பெற்றது. அக் கழகம் ஆக்கிய சொற்கள் அச்சிடப்பெற்றுத் தக்கார் பலருக்கு அனுப்பப் பெற்றன. நல்ல திருத்தங்கள் தரும் முதல் மூவருக்குப் பரிசு வழங்கப்பெறும் என்று விளம்பரமும் செய்யப்பெற்றது.

சென்னை அரசாங்கம் ஒவ்வொரு நிலையிலும் சங்கத்துக்குத் துணை புரிந்து வந்தது; நெல்லைக் குழுவினிற் நெல்லைமாவட்ட அரசியற் பணியாளர் உறுப்பினராக இருக்க இசைவாணை (1317,23-3-1955) அனுப்பியது; தமிழகத்திலுள்ள மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் யாவருக்கும் ஆட்சிச் சொற்படிகளை அனுப்பி ஆராய்ந்து நல்ல திருத்தங்கள் கண்டு சங்க அமைச்சருக்கு அனுப்பும்படி (11-2-1956-ல்) எண் (799-56-1) ஆணையனுப்பியது. அதன்படியே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கே நன்குக ஆராய்ந்து திருத்தங்களை அனுப்பி உதவினுர்கள்; தக்க பல புலவர்களும் திருத்தங்கள் அனுப்பினுர்கள்.

வந்துள்ள திருத்தங்களைப் பார்வையிட்டு ஆட்சிச் சொற்களை முடிவுசெய்து தரும்படி சென்னையில் ஆட்சிச்சொற் கழகத்தைச் சங்கம் 30-1-1956-ல் அமைத்தது. அதன் தலைவர் திரு. வேங்கடேசுவரன் அவர்கள், I. C. S. சென்னை வருவாய்த் துறை அலுவலகத்தில் (Board of Revenue) சொல்லாக்கக் கூட்டங்கள் நடத்துவதற்கு 21-2-1956-ல் அரசாங்கம் இசைவாணை அனுப்பியதோடு 27-2-1956 எண் 773 ஆணையால் நம் சங்கத்திற்கு ஓராயிரம் ரூபா முன்பணமாக வழங்கியது. பின் 22-6-1956-ல் எண் 2207 ஆணையால் சங்கம் அமைத்துள்ள சென்னை ஆட்சிச்சொற் கழகத்தை ஏற்றுக்கொண்டது.

நமது சங்கம் அமைத்த சென்னை ஆட்சிச் சொற் கழகம் தமிழில் ஆட்சி நடைபெறுவதற்கு ஏற்ற ஆட்சிச் சொற்களை ஆராய்ந்து அமைத்து 20-12-1956-ல் சென்னை அரசாங்கத்தினிடம் ஒப்புவித்தது ; முதலமைச்சர் திருவாளர் கெ. காமராசனுர் அவர்கள் தங்கள் துணைவர்களாகிய பாதுகாவல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்றைய மராமத்து அமைச்சர் சேதுபதி யவர்கள் ஆகிய மூவருடனும் சென்னை யில் இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற ஒப்படைப்பு விழாவினுக்கு வந்திருந்து ஆட்சிச் சொற் கழகத் தலைவர் திரு. சு. வேங்கடேசுவரன் I. C. S., அவர்கள் ஒப்படைக்கச் சென்னை அரசாங்கத்தின் சார்பாகத் தமிழாட்சிச் சொற்களை ஏற்றுக்கொண்டார்கள். மறுநாள் தமிழாட்சிச் சட்டம் சென்னைச் சட்டசபையில் நிறைவேறியது. நமது ஆட்சிச் சொற்களை அச்சிட்டுப் பல துறைகளுக்கும் அனுப்பி நமது சென்னை அரசாங்கம் தமிழாட்சியை நடத்தி வருகிறது.

இவ்வகையில் நமது சங்கத்திற்குச் செலவாகியது ரூ. 3,517-7-0. இந்த ரூபா மூவாயிரத்து ஐந்நூற்றுப் பதினேழு அணு ஏழுமட்டும். இதில் அண்ணு மலைப் பல்கலைக் கழகம் வழங்கிய ரூ. 250-ம் சென்னை அரசாங்க முன்பணம் ரூ. 1,000-மும் போக மீதிச் செலவு 2,267-7-0-ம் சென்னை அரசாங்கம் வழங்கியது.

ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கம்

21-12-1956-ல் நடைபெற்ற ஆட்சிச்சொல் ஒப்படைப்பு விழா விற் படித்த அறிக்கையின் இறுதியில் பின்வரும் பகுதி காணப் பெறு கிறது. அது, " முன் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி வழியாகக் கல்வி நடை பெறுவதற்கு நமது சங்கம் இடைவிடாது முயன்று கலைச் சொற்களை அமைத்துத் தந்ததுபோலவே இனி, கல்லூரிக் கல்விக்கும் துணைபுரிய நமது சங்கம் முன் நின்று பணிபுரியும் கடமையும் உடையது. அரசாங்கமும் பல்கலைக் கழகங்களும் இந்நிலை காணத் துணை புரியும் என நமது சங்கம் எதிர்நோக்கி நிற்கின்றது " என்பது.

இம் முடிவினுக்கிணங்க நமது சங்கம் பின்வருமாறு எண்ணியது : " ஆசிரி யர் கல்லூரிகளிற் பயிற்சிபெறும், பி. ஏ., எம். ஏ.,ப் பட்டம் பெற்றோர் அனைவரும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராக அமைந்து நம் தாய் மொழியாகிய தமிழிலே தானே பாடங்களைக் கற்பிக்கின்றனர் ; ஆதலால், அவர்களுக்குப் பயிற்சிக் கல் லூரிகளின் பாடங்களெல்லாம் தமிழிற் கற்பிக்கப் பெறுவதுதானே நன்மை தரும் முறையாகும்." இங்ஙனம் எண்ணிய சங்கத்திற்குப் பெருந்துணையாயினர் சைதாப் பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. மு. இராம. பெருமாள் முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள்; கழகத் தலைமை தாங்கி நடத்தித்தரச் சென்னை மாநிலப் பொதுக் கல்வி இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு எம். ஏ., எல். டி., அவர்களும் இசைவு தந்தார்கள். இவர்களுடைய துணையைப் பற்றிக் கொண்டு நம் தமிழ்ச் சங்கம் 15-3-1957-இல் ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல் லாக்கக் கழகத்தை அமைத்தது.

அதன் உறுப்பினர் நம் நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் முதல்வர்களும் பல பேராசிரியர்களும் ஆவர். சைதாப்பேட்டை ஆசிரியர் கல் லூரிப் பேராசிரியரனைவரும் பேருதவி புரிந்தனர். இதிற் பணியாற்றும் அரசியல் அலுவலர்களுக்குச் சென்னை அரசாங்கம் 21-5-1957-இல் எண் 241 ஆணை யால் அனுமதி யருளியது. இக் கழகம் 21-3-1957-இல் தொடங்கி நாடோறும்

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிற் கூடி 31-3-1957 வரை பணிபுரிந்தது. அதன் விளைவாக அமைந்தது " ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள் " என்னும் நூல். அதன் தற்கால வெளியீட்டு விழா 25-1-1958-ல் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் புனிதயோவான் கல்லூரி முதல்வர் திரு. வேதசிரோமணி அவர்களால் தமிழ்க்கொடி யேற்றப்பெற்று, புனித சவேரியர் கல்லூரி முதல்வர் மறைத் திரு. சூசை அடிகளார் தலைமைதாங்க நடைபெற்றது. இந்துக் கல்லூரி முதல்வர் திரு. க. ச. கணபதிப் பிள்ளையவர்கள் நூலை வெளியிட்டார்கள். வ. உ. சி. ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. கி. அர. அப்புள்ளாச்சாரியாரவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அந் நூல் ஆசிரியர் கல்லூரிகள் அனைத்திற்கும் அனுப்பப்பெற்றது; நல்ல திருத்தங்கள் தரும் முதல் இருவருக்குப் பரிசு வழங்கப்பெறும் என்ற விளம்பரமும் குறிக்கப்பெற்றது.

ஆசிரியர் கல்லூரிகள் யாவும் திருத்தங்கள் அனுப்பின; அவற்றை வைத்துக்கொண்டு சொற்களை முடிவு செய்யும்பொருட்டுச் சொல்லாக்கக் கழகம் 26-3-1958, 27-3-1958; 10-6-1958, 11-6-1958, 12-6-1958, 13-6-1958, 14-6-1958; 12-11-1958, 13-11-1958, 15-11-1958, 24-12-1958, ஆகிய நாட்களில் கூடி நன்கு ஆராய்ந்து முடிவு செய்ததுடன் ஆட்சிச் சொற்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து முடிவுசெய்ய ஓர் உட்கழகத்தையும் அமைத்துப் பரிசுக்குரியாரையும் தீர்மானித்தது. மாநிலக் கல்வி இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களும், திரு. மு. இராம. பெருமாள் முதலியாரவர்களும், திரு. கி. அர. அப்புள்ளாச்சாரியாரவர்களும் செய்த பெருந் துணை அருந்துணையாகும்.

உட்கழகம் 25-12-1958, 26-12-1958, 27-12-1958, 29-12-1958 ஆகிய நாட்களிற் கூடி ஒவ்வொரு நாளும் பல மணி நேரங்கள் பணியாற்றிச் சொற்களை நிறைவு செய்தது. அங்ஙனம் அமைந்த சொற்கள் அடங்கிய நூலே 4-2-1959 ஆகிய இன்று அச்சாகி வெளி வருகின்றது.

இந்த வகையில் நமது சங்கத்திற்குச் செலவாகியது வள்ளுவர் 1988 (1957), 1989 (1958) ஆகிய இரண்டாண்டுகளிலுமாக ரூ. 1621-14-3 (1988-ல் ரூ. 587-15-0+1989-ல் ரூ. 1033-15-3) ரூபா ஓராயிரத்து அறுநூற்று இருபத்தொன்று, அணு பதினான்கு, பைசா மூன்றுமட்டும்; இப்போது நடைபெறும் விழாச் செலவும், நூல் அச்சிட்ட செலவும் வேறு.

இங்ஙனமாக மிகச் சுருங்கிய செலவில் நமது சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் மிகப் பெரிய பணிகளை யாற்றி வருகின்றது.

பரிசளிப்பு

ஆட்சிச் சொற்கள் :

பின் வருகின்ற பெரியார்களுக்குப் பரிசாகச் செப்புப் பட்டயம் வழங்கப் பெறும் :—

சிறப்பு : அமைச்சரவர்களுடன் இருந்து ஆட்சிச் சொல்லாக்கத்துக்கு எல்லாத் துணையும் புரிந்த பேராசிரியர் ஆ. அருளப்பன் அவர்களுக்குத் "தமிழ்ப் பெரும் புலவர்" என்ற பட்டம் வழங்கப்பெறுகிறது.

முதற் பரிசு :

திரு ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள்,
(சென்னைச் சட்டசபை முன் செயலாளர்.)

இரண்டாம் பரிசு :

பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள்,
(அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழித்துறைப் பேராசிரியர்.)

திரு. K. S. சம்புநாதன் அவர்கள்,
(ஆங்கில அரசாங்கச் செய்திப்பணி, புதுதில்லி.)

ஆசிரியர் சொற்கள்

பின்வரும் கல்லூரிகளுக்குப் பரிசாகச் செப்புப்பட்டயம் வழங்கப்பெறும்.

சிறப்பு : அடிப்படைப் பணிகள் முதல் பணி நிறைவு பெறும்வரை பெருந்துணை புரிந்த சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிக்குப் பாராட்டுப் பரிசு வழங்கப் பெறும்.

முதற் பரிசு :

திருப்பராய்த்துறை விவேகானந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

இரண்டாம் பரிசு :

தூத்துக்குடி வ. உ. சி. ஆசிரியர் கல்லூரி.

சங்கத்தின் முன் நிற்கும் பணி

பாடச்சுவடிகள் இல்லாமையாகிய காரணத்தைக் கூறி 1936-இல் உயர் பள்ளிகளில் தாய்மொழி வழியாக எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதைப் பலர் பல காரணங்களால் எதிர்த்தார்கள். ஆனால் அரசாங்கம் எதையும் பொருட்படுத்தாது தாய்மொழி வழியாகத்தான் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப் பெறல்வேண்டும் என்று ஆணை யிட்டது. அப்போது நமது சங்கம் கலைச் சொற்களை ஆராய்ந்து முடிவு செய்யும்பொருட்டுச் சென்னையிற் சொல்லாக்கக் கழகத்தை அமைத்தது. அக் கழகத்திற் சேர்ந்து பணியாற்ற அரசியற் பணியாளர் அனைவருக்கும் பொது அனுமதியை அரசாங்கம் அருளியது. அப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் தற்காலத் துணைவேந்தராக இருந்த டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரவர்கள், திருவாளர்கள் வையாபுரிப் பிள்ளை யவர்களையும், டாக்டர் சேதுப் பிள்ளை யவர்களையும் பல்கலைக் கழகத்தின் சார்பில் அனுப்பியதோடு கலைச் சொற்கள் அச்சிடுவதற்கும் பொருளுதவி செய்து ஆதரித்தார்கள். கழிந்த இருபது ஆண்டுகளாக உயர்பள்ளிகளில் நடந்துவரும் தாய்மொழி வழிக் கல்வியினால் எதுவும் குறைந்துவிடவில்லை. ஆங்கிலத்திற் சிறிது தகுதி குறைகிறதற்கு இது காரணம் அன்று; வேறு பல தக்க காரணங்கள் இருக்கின்றன.

கல்லூரிகளில் எல்லாப் பாடங்களையும் தாய்மொழி வழியாகக் கற்பியாமையினாலே பட்டம் பெறுபவர் பெரும்பாலோர் கிளிப் பிள்ளைகள் போலவே இருக்கின்றனர் ; தாய் மொழியிற் கல்வி பெற்றால் மாணவர் பெரும்பாலோர் ஆராய்ச்சி வல்லுநராகி உலகத்துக்குப் பெரும்பயன் விளைவிப்பார்கள் என்பது உறுதி.

இப்போது ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கம் நிறைவு பெற்றுவிட்டது. அச் சொற்களைப் பயன்படுத்தி நூல்கள் எழுதப்பெறுகின்றன. அவை இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வெளிவருவது உறுதி. அங்ஙனமே வாய்ப்பளித்தால் ஏனைய பொதுக் கல்லூரிகளிலுள்ள எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனி இவ்விரண்டு சிறந்த பாடச் சுவடிகளும் (Text Books) கலைச் சொற்களும் இரண்டாண்டுகளுக்குள் ஆக்கி அச்சிட்டுத் தருவது மிகவும் எளிது என்பதை அரசாங்கத்தினுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேண்டுகை

நம் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்துகொள்வதற்குப் பின்வரும் துறைகளிலுள்ள அரசாங்க அலுவலர்களுக்கெல்லாம் அரசாங்கம் பொது அனுமதி வழங்கியிருக்கின்றது: 10-6-1955 அரசாங்க ஆணை எண் 1039, நலத்துறை, கல்வி, நாட்டாட்சி (Health, Education, Local Administration), 29-6-1957 அரசாங்க ஆணை எண் 2663 வருவாய்த்துறை, வணிக வரித்துறை, பத்திரப் பதிவுத்துறை, அறநிலையத்துறை, (Revenue Department including the settlement of Estate Branch, Commercial Taxes Department, Registration Department, Hindu Religious & Charitable Administration Department). தமிழ் மக்களனைவரும் நம் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து நம் தமிழ்த் தாய்க்குச் சேவை செய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றியுரை

இங்ஙனமாகிய நம் சங்கத் தொண்டுகளிலே பேருதவி செய்துவரும் பேராசிரியர்களுக்கும் பெரும் புலவர்களுக்கும் சங்கத்தின் நன்றியுரியது. இன்று ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்களை வெளியிட்டருள வந்திருக்கும் கல்வி அமைச்சர் திருவாளர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், பரிசு பெறுவோரை வாழ்த்தியருள வந்திருக்கும் உள்நாட்டு அமைச்சர் திருவாளர் எம். பக்தவத்சலம் அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம். இன்று இப்பேரவைக்குத் தலைமை தாங்கிச் செப்புப் பட்டயங்களை வழங்க எழுந்தருளி வந்திருக்கும் நமது கவர்னர் திரு பிஷ்ணுராம் மேதி அவர்களுக்கு நம் நன்றி என்றும் உரியது. இப் பெரியார்களுடன் இங்கே உளம் உவந்து வந்து குழுமியிருக்கும் பேரவையினர் அனைவரும் ''நீடூழி வாழ்க'' என நம் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வாழ்த்துகின்றது.

சென்னை,
4-2-1959.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்.

ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள்

A

abacus மணிச்சட்டம்
abdomen வயிறு
abdominal வயிற்று
aberration விலக்கம், கோளாறு
ability ஆற்றல்
  arithmetical எண்கணக்கு ஆற்றல்
  artistic கலையாற்றல்
  drawing ஓவியஆற்றல்
  general பொது ஆற்றல்
  geometrical வடிவ கணித ஆற்றல்
  linguistic மொழியாற்றல்
  manual கை ஆற்றல்
  mathematical கணிதஆற்றல்
  mechanical பொறியாற்றல், இயந்திர வாற்றல்
  motor இயக்க ஆற்றல்
  musical இசையாற்றல்
  numerical எண்ஆற்றல்
  organising அமைப்பாற்றல்
  reading வாசிப்பாற்றல், படிப்பாற்றல்
  spatial இட ஆற்றல்
  special சிறப்பாற்றல்
  verbal சொல் ஆற்றல்
abnormal இயல்பிகந்த, இயல்பு கடந்த, நெறிபிறழ்
aboriginal தொல்குடிசார்ந்த (வன்)
Abraham's test ஆபிரகாம் சோதனை
abreaction தடையிலா வெளியீடு
abridgment சுருக்கம்
absence இல்லாதிருத்தல், வராமை
absent-mindedness மனம் செல்லாமை
absolute முழுமை, முழு, வரம்பிலா
absolutism வரம்பிலா ஆட்சிமுறை
abstract பொதுமைபிரி, தனித்தெடு, புலன்தாண்டு, கருத்தியல், குண, அருவ, நுண்
abstraction பொதுமை பிரித்தல், பொதுநிலைப்படுத்தல்
abstract reasoning கருத்தியல் ஆய்வு
abstruse அரிதுணர்
absurd பொருத்தமற்ற
academic கல்விபற்றிய
academic course ஏட்டுக் கல்வி
academy கல்விக் கழகம், அறிவுக்கூடம், கலைமன்றம்
accent உச்சரிப்பழுத்தம்; அழுத்தம்
acceptance ஏற்பு, ஒப்பம்
access அணுகுமை; காட்சிக்கெளிமை; அடைதற் கெளிமை; நுழைவுரிமை.
accession சேர்க்கை, இணைதல்
accessory துணைக்கருவி
accidental தற்செயலான
accommodation இடவசதி, இடமளித்தல், இணங்கிப் போதல், விட்டுக் கொடுத்தல்
account கணக்கு, கணக்கிடு, வரலாறு
accountant கணக்கர்
accretion மேன்மேற் படிதல்
acculturation பண்பாட்டுப் புகுத்தல்
accuracy திருத்தம், திட்பம்
accusation குற்றச்சாட்டு
achievement அடைவு
acoustics ஒலியியல்
act நடி, செயலாற்று, சட்டம், அங்கம்
acting நடிப்பு, பதில் பார்த்தல்
acting hand } பதிலி
,, incumbent } பதிலி

action-song ஆட்டப் பாட்டு
active சுறுசுறுப்பான, செயலுற்ற
participation ஈடுபாடு
activity செயல், தொழிற்பாடு
creative ஆக்கச் செயல்
group குழுச் செயல்
mass கூட்டச்செயல்
-method செயல்முறை
-programme செயல் நிரல்
purposive நோக்குடைச் செயல்
specialized தனித்தேர்ச்சிச் செயல்
activities செயல்கள்
indoor உள்ளிடச்செயல்கள்
outdoor வெளியிடச்செயல்கள்
recreational விளையாட்டுச்செயல்கள்
acrophobia உயிரிடக்கிலி
acuity கூர்மை
adapt இணங்கமாறு (ற்று)
adaptability இணங்கு திறன்
adaptation தழுவல்
addenda பிற்சேர்க்கை
addition கூட்டல், சேர்க்கை
adduce எடுத்துச்சொல்
adenoids மூக்கடை சதை
adequacy இயலுமை, போதுமானம்
adhesive compress ஒட்டுக்கட்டு
adjustment பொருத்தப்பாடு, பொருத்துகை, சரிக்கட்டுதல்
administration ஆட்சி
administrator ஆட்சியாளர்
admiration போற்றுதல்
admission நுழைவு, சேர்த்தல்
adolescence குமரப்பருவம்
adolescent குமரன், குமரி
adrenalin அட்ரினலின்
adult முதிர்ந்தோர்
adult hood முதிர்பருவம்
adventure துணிவுச் செயல், வீரச்செயல்
advertising விளம்பரம் செய்தல்
aesthenic வலுக்குறைந்த
aesthetic எழிலுணர்
aesthetics எழிலியல்
affection அன்பு
affective எழுச்சிசார்ந்த, உட்பாட்டு
affective aspect எழுச்சிக்கூறு, உட்பாட்டுக்கூறு
afferent உட்செல்
affiliate இணை
affiliation இணைப்பு
after-image பின்விம்பம்
after-sensation பின் புலனுணர்ச்சி
age வயது, பருவம், காலம்
-characteristics பருவப்பண்புகள்
chronological காலவயது
developmental வளர்ச்சி வயது
educational கல்விவயது
mental மனவயது
physiological உடல் வயது
agency செயல் நிலையம், செயலாண்மை, செயற்கருவி, செயலிக்குழு
agent செய்பவன், செயலி
aggregation கூடுதல், தொகுதியாக்கல்
aggression மீச்செலவு, வலுவந்தம்
aggressive வலுவந்த
agility இயக்கவிரைவு
agrarian நிலஞ்சார்ந்த, நில, வேளாண்
agrophobia வெளியிடக்கிலி
agriculture வேளாண்மை, விவசாயம்
aid, first முதலுதவி
aids துணைக்கருவிகள்
audio-visual காட்சி கேள்விக்கருவிகள்
teaching போதனைக் கருவிகள்
aim நோக்கம், குறி
character ஒழுக்கநோக்கம்
cultural பண்பாட்டு நோக்கம்
disciplinary கட்டுப்பாட்டு நோக்கம்
individuality தனித்தன்மை நோக்கம்
learning கற்றல் நோக்கம்
leisure ஓய்வு நோக்கம்
livelihood பிழைப்பு நோக்கம்
,, of balanced personality சமன்பட்ட ஆளுமை நோக்கம்
practical நடைமுறை நோக்கம்
,, of preparation for complete living முழுவாழ்க்கைக்கு ஆயத்தநோக்கம்
social கூடிவாழ் நோக்கம்
album படத்தொகுப்பு
algebra எழுத்துகணக்கு
alimentary canal உணவுக்குழாய், உணவுப்பாதை
allegory ஒட்டுவமை
alliteration மோனை
alphabetical method நெடுங் கணக்குமுறை
alternate ஒன்றுவிட்ட, மாறி மாறி நிகழும்
alternative response test இரண்டில் ஒன்று துலங்கல் தேர்வு

altruism பொதுநலப்பண்பு
amateur தொழிலாகக் கொள்ளாத
ambiguous இரட்டுறு, கவர்படு, தெளிவிலா
ambiguity இரட்டுறுதல், கவர்படுதல், தெளிவின்மை
ambivalence இருபுடை ஈர்ப்பு
ambivert இருமுகன், இருநோக்குடையான்
amenity வசதி, நலம்
amentia மடமை
amnesia மறவி
amoeba ஓர்அணு உயிரி
amusement வேடிக்கை, பொழுது போக்கு
anabolism உயிரிழையாக்கம்
anaemia சோகை
analogy ஒப்புடைமை
analysis பகுப்பு, பாகுபாடு
analytic method பகுப்புமுறை
anarchy ஆட்சியின்மை, குழப்பம்
anatomy உடலமைப்பியல்
ancestor முன்னோர்
ancient பண்டைய, தொன்மையான
anecdote வாழ்க்கைத்துணுக்கு, தனி நிகழ்ச்சி
anecdotal records வாழ்க்கைத் துணுக்குப் பதிவுகள்
anger சினம்
angle கோணம்
acute குறுங்கோணம்
adjacent அண்மைக்கோணம்
alternate ஒன்றுவிட்டகோணம்
complementary செந்நிரப்புக்கோணம்
corresponding ஒத்தகோணம்
obtuse விரிகோணம்
-of depression இறக்கக்கோணம்
-of elevation ஏற்றக் கோணம்
-of incidence படுகோணம்
-of reflexion திரும்பக்காட்டு கோணம்
-of refraction பிரிகோணம்
right செங்கோணம்
reflex பின்சாய் கோணம்
straight நேர்கோணம்
supplementary நேர்நிரப்புக்கோணம்
animal விலங்கு
animate உயிருள்ள
animism உயிர்க் கொள்கை
ankle கணுக்கால்
ankle toss கணுக்கால் அலைத்தல்
anniversary ஆண்டு நிறைவு
annotation விளக்கஉரை
annoyance அலைப்பு
annoyers அலைப்பிகள்
annual ஆண்டு
answer விடை, மறுமொழி
antecedent முன்னிகழ்ச்சி, முன் நிகழ்ந்த
anterior முன்பக்க, முந்திய
anthology திரட்டு
anthropology மனிதநூல்
anthropomorphism மன்கோட் புகுத்தற் கொள்கை
antibiosis எதிர்ப்பொருளாக்கம்
antibody நோயெதிர்ப்பொருள்
anticipation எதிர்பார்த்தல், முன்னறிதல்
antidote மாற்றுமருந்து
antiseptic புரைமுறி
anti social கூடிவாழ் வெதிர்
anti—toxin நச்சுமுறி
antonym எதிர்ச்சொல்
anus குதம்
anvil bone பட்டைச்சிற்றெலும்பு
anxiety கவலை, தவிப்பு
aorta பெருந்தமனி
apathy அசட்டை, உணர்வின்மை
apostrophe தொகைக்குறி
apparatus செய்கருவி
apparition பொய்த்தோற்றம்
appeal மேல் முறையீடு, விண்ணப்பம்
appearance தோற்றம்
appendix பிற்சேர்ப்பு
appetite வேட்கை
apperception உட்புலக்காட்சி, முன்னறிவோடு இணைத்தல்
apperception mass முன்னறிவுத்திரள்
application பயில்வு, செயற்படுத்தல், விண்ணப்பம்
appointment அமர்த்தல், அலுவல், வேலை
appraisal எடையீடு
appreciation பாராட்டு, சுவைத்தல்
apprehension பிடித்தல், தீயது உணர்தல்
apprentice தொழில் பயில்வோன்
apprenticeship தொழில் பயில்நிலை
approach நோக்கு
biological உயிரியல் நோக்கு
ethical அறவியல் நோக்கு
historical வரலாற்றுநோக்கு
logical அளவையியல் நோக்கு, தருக்க நோக்கு

physiological உடலியல் நோக்கு
psychological உளவியல்நோக்கு
sociological கூடிவாழ்வியல் நோக்கு
statistical புள்ளிவிவரவியல் நோக்கு
approbation பாராட்டு, ஆதரவு
approval ஏற்பு
approximate தோராயமான, ஏறக்குறைய
aptitude நாட்டம், தகுதி
aquarium மீன்காட்சி நிலையம், நீர்ப்பொருள் நிலையம்
aquatics நீர்விளையாட்டு
aqueous humour முன்கண் நீர்
arc வளைவு, வில்
arc, reflex மறிவினைப்பாதை
archaeology தொல் பொருளாய்வியல்
architecture கட்டிடக்கலை
argument வழக்காடல், வழக்கு
aristocracy உயர்குடியாட்சி
arithmetic எண்கணக்கு
arm, fore முன்கை
-pit அக்குள்
artery தமனி
art-gallery கலைக்கூடம்
arts and crafts கலையும் கைப்பணியும்
arts college கலைக்கல்லூரி
articulation ஒலிப்பு
artificial respiration செயற்கை மூச்சு
ascetic துறவி
asceticism துறவுக்கொள்கை, தவக் கொள்கை
asepsis புரைமூல நீக்கம்
aspect கூறு
asphyxia மூச்சடைப்பு
aspiration, level of அவாவு நிலை
assembly பேரவை
assent உடன்பாடு
assessment நிறையீடு
assignment ஒப்படைப்பு
post—lesson பாடப்பின் ஒப்படைப்பு
pre—lesson பாடமுன் ஒப்படைப்பு
assimilation தன்வயப்படுத்தல்
association சங்கம், தொடர்பு, தொடர்புறுத்தல்
Law of தொடர்புவிதி
asthenic அடங்குப்போக்கன்
athlete உடற்பயிற்சி வல்லுநர்
athletics உடற்பயிற்சி
atlas நிலப்படம் நூல்
atropy நசித்துப்போதல்
attainment அடைவு, பேறு
attend கவனி
attendance வருகை
attention கவனம், நேர் நில்
atmosphere இயற்சூழ்நிலை
attitude மனப்பான்மை
attribute இயற்பண்பு
audience அவை, கேட்டல், கேட்போர்
audio—visual aids காட்சிக் கேள்விக் கருவிகள்
auditorium ஒலியரங்கு
auditory செவி—, செவிசார்
aural செவி—, செவிக்குரிய
author ஆக்கியோன், நூலாசிரியன்
authoritarian அதிகார உரிமையுள்ள
authoritarian stage அடக்குநிலை, அடங்கு நிலை
authority ஆணையிடும் உரிமை, ஆணையிடுவார்
autobiography தன் வரலாறு
automatism தன்னியக்கம்
automatic writing எண்ணுதெழுதல்
auto-suggestion தற்கருத்தேற்றல்
auxiliary துணை
„ cadet corps துணைப்பயிற்சிப் படை
average சராசரி, நடு
aversion வெறுப்பு
avocation விழைவலுவல்
award வழங்கல், அளிப்பு, தீர்ப்பு
awareness உணர்வு
awe பயபக்தி
awkward இசைவற்ற, பொலிவற்ற
axiom அடிப்படை உண்மை, வெளிப்படை உண்மை
axis அச்சு
axon நரம்பிழை

B

babbling உளறுதல்
baby குழவி
babyhood குழவிப்பருவம்
background பின்னணி, நிலைக்களம்
backward பிற்பட்ட
backwardness பிற்படல்
backward roll பிற்கரணம்
bacteria நுண்ணுயிரி
badge சின்னம், வில்லை
badminton பூப்பந்து
balance சமநிலை, சமனுக்கு, இருப்பு, துலை

balance bench சமநிலைப்பலகை
balance pass சமநிலைக்கடத்துகை
balance walk சமநிலைநடை
ballad நாட்டுக்கதைப் பாடல், கதைப் பாட்டு
ball and socket joint பந்துக்கிண்ணமூட்டு
ball throw பந்தெறிதல்
ballot குடவோலை
bandage கட்டு
band-wagon technique முரசறை முறை
bard பாணன்
bar diagram கட்டை உருவப்படம்
barograph அழுத்தவரையி
barometer பாரமானி, அழுத்தமானி
barren hypothesis பயனற்ற கருதுகோள்
barrier தடை
base அடி, தளம்
base ball தளப்பந்து
basic அடிப்படை, மூல
junior கீழ் அடிப்படை
post பின் அடிப்படை
pre முன் அடிப்படை
senior மேல் அடிப்படை
basis அடிப்படை
basket ball கூடைப்பந்து
bathy metric map கடல் ஆழம் காண் படம்
battery அடுக்கு
becoming ஆதல்
behaviour நடத்தை
group கூட்டுநடத்தை
-pattern நடத்தைக்கோலம்
behaviourism நடத்தைக் கொள்கை
behaviourists நடத்தைக் கொள்கையினர்
being உளவாதல்
belief நம்பிக்கை
belongingness சார்புடைமை
bias ஒருபுறச்சாய்வு
bibliography நூற்றொகுதி
biceps இருதலைத்தசை
biennial ஈராண்டு
bifurcation இருகிளைப்பிரிவு
bile பித்தநீர்
bilingual இருமொழி
binocular vision இருகண்பார்வை
binomial ஈருறுப்பு
biography வாழ்க்கை வரலாறு
biographical records வாழ்க்கை வரலாற்றுப்பதிவுகள்
biology உயிரியல்
bipolar theory இருமுனைக்கொள்கை
birth-control கருத்தடை
black-board கரும்பலகை
blame குற்றங்கூறல், குற்றம்
blind spot குருட்டுப்புள்ளி
blisters கொப்புளம்
blockade மறிப்பு
block-design test கட்டைக்கோலச் சோதனை
block development officer தொகுதி முன்னேற்ற அலுவலர்
Board பலகை, கழகம்
black கரும்பலகை
bulletin அறிவிப்புப்பலகை
chalk சுண்ணப்பலகை
news செய்திப்பலகை
notice அறிக்கைப்பலகை
bodily control உடற்கட்டுப்பாடு
boarding house உண்டுறை இல்லம்
boarding sehool உண்டுறை பள்ளி
body உடல்
boil கட்டி
bond தளை, முறி
book சுவடி, புத்தகம், ஏடு, நூல்
-keeping கணக்குப்பதிவியல்
note குறிப்பேடு
reference மேற்கோள்நூல்
text பாடப் புத்தகம்
work வேலைச்சுவடி
border line வரம்பு
boredom சலிப்பு, அலுப்பு
bowline knot வலைஞர் முடிச்சு
boxing குத்துச்சண்டை
boyhood பிள்ளைப்பருவம்
boy scouts சாரணச்சிறுவர்
brain மூளை
fore முன்மூளை
hind பின்மூளை
mid மையமூளை
bracket அடைப்பு, பலகைதாங்கி
branch கிளை
brand வகை
bread and butter aim வயிற்றோம்பும் நோக்கம்
breakdown ஓய்தல், நிறுத்தம், ஒடிவு
breath மூச்சு
breath-in மூச்சு இழு

breath-out மூச்சுவிடு
breathed sound உயிர்ப்பொலி
breathing உயிர்த்தல்
breed பயிற்றிவளர், வளர்ப்பினம்
brevity சுருக்கம், சுருங்கச் சொல்லல்
bridging இணைத்தல்
broadcast ஒலிபரப்பு, விளம்பரப்படுத்து
broad fields பெருந்தொகுதிகள்
broken home சிதைந்த குடும்பம்
நிலைகெட்ட குடும்பம்
bronchitis மூச்சுக்குழலழற்சி
brother உடன் பிறப்பாளன்
brotherhood உடன்பிறப்பாண்மை.
brush தூரிகை, துடைப்பான்
brute விலங்கு, முரட்டு
budget வரவுசெலவுத்திட்டம்
building கட்டிடம்
bulletin அறிவிப்பு
bullying கொடுமைப்படுத்தல்
burden சுமை, பொறுப்பு
bureau பணிமனை, செயலகம்
by-product உடன்விளைவு, உடன் விளை பொருள்

C

cabinet அமைச்சு
cadestral map மீப்பெருநில் அளவுப்படம்
cadet பயிற்சிப்படைஞன்
cadre தொழில் நிலைப்பிரிவு
calculate கணக்கிடு
calculation கணக்கீடு
calculator கணக்கிடுகருவி, கணக்கர்
calculus நுண்ணியற் கணக்கு
differential வகை நுண்ணியற் கணக்கு
integral தொகை நுண்ணியற் கணக்கு
calendar காலக்குறிப்பேடு
calibre வலு, பண்பாற்றல்
calisthenic கட்டழகுக்கலை
camp பாசறை, பாடி, தங்கல்
camp-fire பாடித்தங்கல்
camping தங்கல்
canalize மடைமாற்று
cancellation test அடித்தற்சோதனை
candidate (தேர்தல்) விழைவோன்
canon விதி
method of agreement ஒற்றுமைமுறை
difference வேற்றுமைமுறை
concomitant variations உடனிகழ் மாறுபாட்டுமுறை
,, residues எச்சமுறை
joint method of agreement and difference ஒற்றுமை - வேற்றுமைமுறை
canteen அருந்தகம்
capability திறமை
capitation grant தலைவிகிதமானியம்
caption தலைப்பு
captain தலைவன்
cardinal principles அடிப்படைக் கொள்கைகள்
cardiograph இதயத்துடிப்பு வரையி
card sorting test சீட்டுப்பிரித்தற் சோதனை
card stacking சீட்டுப்புரட்டல்
career வாழ்க்கைத்தொழில்
caricature மிகைப்படம்
carry - over value எஞ்சுபயன்
cartography நிலப்படக் கலை
cartoon கேலிப்படம்
cart wheel சகடக்கால் ஆட்டம்
carve செதுக்கு
case- study தனியாள் ஆராய்ச்சி
தனிக்குழந்தை ஆராய்ச்சி,
cash - bill உரொக்கச் சீட்டு
caste சாதி
casual தற்செயலான, நேர்ந்த
casual leave நேர்பு விடுப்பு,
casualty அடிபாடு
catabolism உயிரிழைச்சிதைவு
catalogue பட்டி
catch problem பொடிக்கணக்கு
catechetical school வினாவிடைப்பள்ளி
catechism வினாவிடை
category வகை
cater பரிமாறு, தேவைக்குதவு
catharsis காலுதல்
cathartic theory காலுதற் கொள்கை
cathedral school தலைக்கோயிற்பள்ளி
catholic கத்தோலிக்க
causal relationship காரண காரியத் தொடர்பு
causality காரணத்தன்மை
cause காரணம், முதல்
exciting தூண்டுகாரணம்
final முற்றுக்காரணம்
immediate உடனடிக்காரணம்
instrumental துணைக்காரணம்
maintaining நிலைநிறுத்து காரணம்

material பொருட்காரணம்
predisposing முற்கொளுவு காரணம்
caution எச்சரிக்கை
celebration கொண்டாட்டம், விழா
cell உயிரணு
cell - body உயிரணுவறை
cellular உயிரணுக்களாலான
censor கண்டனையாளர்
censure பழிப்பு, கண்டனம்
census குடிக்கணக்கு
central மைய, மையமான
central tendency மைய நிலைப்போக்கு
centralize மையப்படுத்து
centre மையம்
centrifugal மையம்விடு
centripetal மையம்நாடு
centroid ஈர்ப்புமையம்
cephalic கபால, தலைபற்றிய
cerebellum சிறுமூளை
cerebral மூளைசார்ந்த, தலையொலி
cerebro - spinal மூளைத்தண்டுவட
cerebrum பெருமூளை
ceremonial புற ஆசாரமான
ceremony சடங்கு
certificate சான்று
cervical கழுத்துப் பற்றிய
cess மேல்வரி
chain reflex தொடர்மறிவினை
chalk, piece of சீமைச் சுண்ணக்கட்டி
challenge அறைகூவல், அறைகூவு
chamber of resonance ஒத்தொலி அறை
champion வெற்றி வீரன், வாகை வீரன்
chance வாய்ப்பு, தற்செயல்
change மாறு, மாற்று, மாறுதல்
channel நெறி, வாய்க்கால்
chant பாடு, ஓது
chaos குழப்பம்
chapter இயல், அதிகாரம்
character ஒழுக்கம், சால்பு, பாத்திரம்
characteristic பண்புக்கூறு, சிறப்பியல்பு
charity அறம்
chart கருத்துப்படம்
chasing விரட்டல்
check சரிபார்த்தல், குறித்தல், தடை
check - list குறிப்பிடு பட்டியல்
chest - pass நெஞ்சுக்கடத்துகை
child பிள்ளை
child - centred பிள்ளை மைய
childhood பிள்ளைப்பருவம்
chivalry நல்வீரர் பண்பு
choice தேர்தல் கொள்ளல்
choleric சிடுமூஞ்சி
chorographical map மீச்சிறு நில அளவுப் படம்
chord நாண்
choroid விழியடிக் கரும்படலம்.
chorus கூட்டிசை
christian கிறித்தவ
chromatic நிற, வண்ண
chromosome உயிர்மின்கோல்
chronic நாட்பட்ட
chronicle கால வரன்முறை, நாளாகமம்
chronology கால வரிசை, கால வரன்முறை
church (கிறித்தவக்)கோவில், திருச்சபை, சமய அமைப்பு
ciliary muscles சிலியரித்தசை
cinema படக்காட்சி
cipher சுழி
circle வட்டம்
circular வட்டமான, சுற்றறிக்கை
circular functions முக்கோணகணித இணைப்புகள்
circulation சுற்றோட்டம்
citizen குடி
citizenship குடிமை, குடியுரிமை
civics குடிமை நூல்
civil government உள்நாட்டு அரசாங்கம்
civilization நாகரிகம்
clarity தெளிவு
clash மோதல்
class வகுப்பு
-boundary வகுப்பு எல்லை
-frequency வகுப்பு அலைவெண்
-interval வகுப்பு இடைவெளி
-limits வகுப்பு வரம்புகள்
-marks வகுப்பு மதிப்பெண்கள்
-rountine வகுப்பு நடைநெறி
-teaching வகுப்புப் போதனை
classification வகைப்படுத்தல்
classify வகைப்படுத்து
clause உட்பிரிவு
claustrophobia அடைப்புக்கிலி
cleanliness துப்புரவு
cleft palate பிளவண்ணம்
clerical aptitude test எழுத்தர் நாட்டச் சோதனை

clerk எழுத்தர்
climate தட்ப வெப்பநிலை
climax உச்சநிலை
climbing a rope கயிறேறல்
clinic நோய்பேணகம்
clipped endings கடையெழுத்து விழுங்கல்
closed mind மூடியமனம்
closure மூட்டம்
clot உறைவு
clothing உடை
clove hitch யாக்கைமுடி
club சங்கம்
clue உளவு
clumsy இசைவற்ற, இயக்கக் குறைவுடைய
cluster கொத்து
coagulation உறைதல்
cochlea (காது) நத்தை எலும்பு
code குறியீடு, விதித்தொகுப்பு
codification தொகுத்தல், குறியீட்டாக்கம்
co-education கூட்டுக்கல்வி
co-efficient குணகம், கெழு
    differential வகைக்கெழு
    of correlation இணைப்புக்கெழு
    of dispersion சிதறுகெழு
    of skewness சாய்வு கெழு
    of variation மாறுதல் கெழு
co-existence சேரவாழ்தல்
cognition அறிதல்
cognitive அறிவுசார்
cohesion பிணைவு, இறுகிப் பொருந்தல்
coincidence முற்றும் பொருந்துகை
cold சளி
cold spot குளிருணர்புள்ளி
cold storage குளிர்ச்சேமிப்பு
cold war வெருட்டற்போர்
collateral reading இணைவழிப் படிப்பு
colleague உடனுழைப்போன்
collection திரட்டுதல்
    instinct of திரட்டூக்கம்
collective instinct கூட்டூக்கம்
collective unconscious குழுநனவிலி
collectivism கூட்டுமை
college கல்லூரி
collinear நேர்வரை
collinearity நேர்வரைத்தன்மை
colour-blindness நிறக்குருடு
column பத்தி, நெடுக்கைப்பத்தி
coma பெருமயக்கம்
combat, instinct of போரூக்கம்
combination கூட்டுதல், தொகுத்தல்
combination tournament கூட்டாட்டப் பந்தயம்
comedy இன்ப முடிவு
comics நகைச்சுவைக் கதைகள், படக் கதைகள்
command கட்டளை(யிடு), ஏவல்
    cautionary எச்சரிப்பேவல்
    executive செயற்கேவல்
comment உரை எழுது, உரைகூறு
commerce வாணிகம்
commissioner ஆணையர்
committee ஆய்குழு
common பொதுவான
commonsense இயலறிவு
commonwealth பொதுநலக்கூட்டு
communal வகுப்புச்சார்ந்த
communicate செய்தி அனுப்பு, தொடர்பு கொள்
communication போக்குவரவு, செய்தி அனுப்புதல்
communism பொது உடைமை
community குடி, சமுதாயம்
company தொழிற்கூட்டு, தோழமை
comparative method ஒப்புமுறை
comparison ஒப்பு, ஒப்பிடல்
compensation ஈடுசெய்தல்
competence தகுதி
competition போட்டி
compile திரட்டு, தொகு
complaint முறையீடு
complementary நிறைவுறு
complete நிறைவாக்கு
completion test முடித்தற்சோதனை
complex சிக்கல், (உளக்)கோட்டம்
    guilt குற்றச்சிக்கல்
    inferiority தாழ்வுச்சிக்கல்
    superiority உயர்வுச்சிக்கல்
composition கட்டுரை
compost கலப்பு உரம்
compound கூட்டு, சுற்றுச்சுவர்
comprehend புரிந்துகொள்
comprehension புரிந்துகொள்ளுதல்
compromise இணங்கிவருதல்
compulsion கட்டாயம்
computation கணக்கீடு
conation முயற்சி, செயற்படுநிலை

conative முயற்சிசார்
conceit தற்பெருமை
concentration ஒருமுனைப்பு, ஒருமை
concentric பொதுமைய
concept கருத்து, பொதுமைக் கருத்து
conception கருத்துக்கோடல்
conceptual கருத்துச்சார்ந்த
conceptualism கருத்துநிலைக் கொள்கை, பொதுமைக்கருத்துக்கொள்கை
concern கவலை
concert கூட்டிசை
concession சலுகை
conclusion முடிவு
concomitant உடனிகழ்
-variation உடனிகழ் மாறுபாடு
concord ஒத்திசைவு
concrete புலனீடான, உருவ, காட்சிக்குரிய
concurrency ஒருமுனைச்சேர்க்கை
condemnation தூற்றுதல்
condensation சுருக்கம்
condition நிபந்தனை, ஏது, நிலைமை
conditioned ஆக்கநிலையுற்ற
conditioning ஆக்கநிலையுறுத்தல்
de-ஆக்க நிலைநீக்கல்
delayed தவக்க ஆக்கநிலையுறுத்தல்
discriminative வேற்றுமையறி,,
negative எதிர்மறை,,
positive உடன்பாட்டு,,
re-மீள்,,
condonation மன்னிப்பு
conduct நடை, நடத்தை
cones கூம்புகள்
cone of experience அனுபவக்கூம்பு, பட்டறிவுக்கூம்பு
conference மாநாடு
conference plan கூடி ஆராயும் திட்டம்
confession தன்பிழை ஒப்பு
confidential மறை
configuration வடிவம், அமைப்பு
conflict போராட்டம்
conformity உடன்பாடு
confrontation எதிர்நிறுத்தல்
confusion குழப்பம்
congenital பிறவிசார், பிறவி
congruency முற்றொருமை
conjecture ஊகி
conjointly ஒருமித்து
connect சேர், பொருத்து
connection பொருத்து
connectionism பொருத்துதல் கொள்கை
connector பொருத்துவாய்
connotation குணக்குறி, பொருட்பாடு
connote குணங்குறி, பொருள்படு
conscientious மனச்சான்று ஒப்பிய
conscious நனவு
consciousness நனவுநிலை
field of நனவுப்புலம்
consensus கருத்தொற்றுமை
consent இசைவு
consequence விளைவு
consequent பின்னிகழ்ச்சி
conservation பேணல்
conservative பழமைவிரும்பி
consistency முரணின்மை
consolation தேற்றல்
consolidation திடமாக்கல், ஒருங்குதிரட்டல்
constant நிலையான, மாறாத; மாறிலி
constancy மாறாமை, நிலைபேறு
constipation மலச்சிக்கல்
constituent உறுப்பு, உறுப்பியலான
constitution உறுப்பமைதி, அரசியலமைப்பு
constitutional அரசியலமைப்புக்குட்பட்ட
constitutive relation உறுப்புத்தொடர்பு
constraint வற்புறுத்தல்
construction அமைத்தல், கட்டுதல்
construction, instinct of கட்டூக்கம்
constructive ஆக்க
consultant கலந்துரையாளர்
consumer நுகர்வோன்
contact தொடர்பு, தொடு
contagious ஒட்டு, தொத்து
contemplation ஆழ்ந்து நினைத்தல், தியானம்
contemporary இக்கால, ஒரேகால
content அடக்கம், பொருள்
latent உட்படுபொருள்
manifest வெளிப்படைப்பொருள்
contiguity ஒட்டுமை
contiguous ஒட்டிய
continents கண்டங்கள்
contingency ஒரோ வழி, எதிர்பாரா நிகழ்ச்சி
continuation schools தொடர்ச்சிப் பள்ளிகள்
continuation set தொடர்ச்சி நிலை
continuity தொடர்ச்சி

contour சமஉயரக்கோடு
contract ஒப்பந்தம்
contraction சுருக்கம்
contradictory முரண்பட்ட
contrary எதிரான, எதிரிடை
contra set எதிர்நிலை
contrast வேறுபாடு
contra suggestion எதிர்மறைக் கருத்தேற்றல்
contravention மீறுதல், எதிர்த்தல்
contribution அளிப்பு, கொடை, தொண்டு
control கட்டுப்பாடு
controled observation கட்டுக்குட்பட்ட உற்றுநோக்கல்
controversial எதிர்வழக்குடைய
conundrum கடுவினா, விடுகதை
convalescence உடல் தேறுகாலம்
convenience வசதி
convent கன்னியர் மடம்
convention வழக்காறு, அவை, பட்டாங்கு
conventional வழக்காருன
convergent ஒருங்கு கூடும்
conversation உரையாடல்
converse மறுதலை
conversion மாற்றம்
conviction திடநம்பிக்கை
convocation பட்டமளிப்பு விழா, கூட்டம்
convolution மடிப்பு
convulsion நடுக்கம், வலிப்பு, இழுப்பு
co-operation கூட்டுறவு
co-operativeness கூட்டுறவு மனப்பான்மை
co-ordinate நிலைநிறுத்தலளவை
co-ordination ஒருமைப்படுத்தல், இணக்கம், இணைத்தல்
co-ordinator இணைப்பவர்
copy படி
cord நாண், வடம்
cordial உளமார்ந்த
core அடிப்படை
,, subjects அடிப்படைப் பாடங்கள்
cornea கருவிழி
corporal உடல்சார்ந்த
corporal punishment உடல் தண்டனை
corporate கூட்டு
corporation மாநகராட்சி மன்றம், கூட்டவை, கூட்டு
corps படை
auxiliary cadet துணைப்பயிற்சிப்படை
national cadet நாட்டுப்பயிற்சிப்படை

correction திருத்துதல்
corrective திருத்துமுறை
correlate இணை, இணைபொருள்
correlation இணைப்பு, தொடர் புறுத்தல்
correlation coefficient இணைப்புக்கெழு
correspondent நிருபர்
cortex புறணி
cosmetics கோலப்பொருள்
cosmology அண்டவியல்
cosmopolitan பரந்தநோக்குடையவர்
cosmos அண்டம்
costume உடை
coterminous ஒருமுடிவுள்ள
cough இருமல்
council அவை, மன்றம்
counsellor அறிவுரையாளர்
counter எதிர்
counter-foil எதிரேடு
counter-marching எதிரெடுநடை
counter-part ஒத்தபகுதி
counter-sign துணையொப்பமிடு
country நாடு, நாட்டுப்புறம்
couplet ஈரடிச்செய்யுள்
course செல்திசை, (பாய்) பிரிவு
court நீதிமன்றம், களம்
craft கைப்பணி
craftsmanship கைத்தொழில் நுண்மை
cram உருப்போடு, திணி
cranial மண்டையோட்டு
craving வேட்கை
crawl ஊர்தல்
creation படைப்பு, ஆக்கம்
creative ஆக்க, படைப்பு
creative power படைப்பாற்றல், ஆக்க வன்மை
credit மதிப்பு, வரவு
creed கொள்கை, கோட்பாடு, நம்பிக்கைக் கூற்று
cretinism கூழைமை
crime குற்றம்
criminal குற்றவாளி
criminology குற்றவியல்
crisis நெருக்கடி
criterion நியதி, அளவை
critic திறனாய்வாளர்
critical திறனாய்
,, thinking திறனாய்சிந்தனை
criticism திறனாய்வு

cross-question குறுக்குக்கேள்வி
cross-out test வெட்டற்சோதனை
crowd கூட்டம், திரள்
crucial experiment தீர்வுச் செய்காட்சி
,, test தீர்வுச்சோதனை,
crude செப்பமற்ற, பண்படா, முதிரா
crude mode பண்படாமுகடு
crutch ஊன்றுகோல்
cry அழு, கூக்குரலிடு, கூவுதல்
cube construction test கனவடிவங்கட்டு சோதனை
cubic கன
cubism கனவடிவநவிற்சி
cuboid கனவடிவப்பொருள்
cue உளவு, நினைவுக்குறிப்பு
cult வழிபாட்டுமரபு
cultivate பண்படுத்து, பேணு, திருத்து
culture பண்பாடு
culture epoch theory பண்பாட்டு வரன் முறைக் கொள்கை
cumulative திரள், திரண்ட
,, frequency திரள்அலைவெண்
,, records திரள்பதிவுகள்
cup-board நிலையறைப் பெட்டி
current events இக்காலநிகழ்ச்சிகள்
curriculum கல்வி ஏற்பாடு
cursive தொடர், தொடராகச்செல்கின்ற
curve பாதை, வளைவு
custom வழக்கம்
cutaneous தோலைப்பற்றிய
cycle சுழல்
cycle of experiments செய்காட்சிச்சுழல்
cycloid சுழல், சுழலுருவம்
cyclopaedia களஞ்சியம்
cypher சுழி
cytoplasm அணு உயிர்ப்பசை

D

dabbling அளைதல்
daily நாள்தோறும், நாள், அன்றாட, நாளிதழ்
dairy பாற்பண்ணை
Dalton plan தால்டன் திட்டம்
dance நடனம், நாட்டியம், நடனஞ்செய்
data விவரங்கள்
date தேதி, நாள்
day நாள்
day-dream பகற்கனவு
dead உயிரற்ற
dead-wood பட்டமரம்
deaf செவிடான
deaf-mute செவிட்டுமை
dean துறைத் தலைவர்
debar தடைசெய்
debatable வாதத்துக்கிடமான
debate சொற்போர், வாதம்
debit பற்றுஎழுது, பற்றுவை
debt கடன்
decade பத்தாண்டு
decadence நலிவு, சீர்குலைவு
decathlon பத்தாட்டம்
decay அழுகு, அழி; அழிவு, சிதைவு
deceit வஞ்சகம், கரவு
decentralization ஆணைப் பகிர்வு, பரவல்
decimal fractions தசம பின்னங்கள், பதின் பின்னங்கள்
decimals தசமங்கள், பதின்கூறுகள், பதின் பகுப்புகள்
decipher தெளிவி, தெளிவாக்கு
decision முடிவு, தீர்மானம்
declaration பேரறிவிப்பு
decode குறியீடு விடுத்தல்
decoration ஒப்பனை
decorum மரபொழுங்கு
dedication படைப்பு ; உரிமை
deduce பகுத்தறிவு, உய்த்துணர்
deduct கழி, எடு, குறை
deduction பகுத்தறிதல்
deductive reasoning பகுத்தறி ஆய்வு
default தவறுதல்
defeatism தோல்வி மனப்பான்மை
defect குறைபாடு, ஊனம்
defence mechanism பாதுகாப்பு வழி அமைப்பு, எதிருன்றல் அமைப்பு
deferred reaction காலந் தாழ்த்த எதிர் விளை
defiance எதிர்த்தல், முறைத்தல்
deficiency பற்றுக்குறை, குறை, தாழ்ச்சி
define வரையறு
definite திட்டமான
definition வரையறை, இலக்கணம்
deflection ஒதுங்கல், விலகல்
deformity உருக்குறை
degeneracy சீர்கெடு நிலை
degeneration சீர்கேடு
degrade நிலையிறக்கு
degree படி, பாகை, பட்டம், நிலை, அளவு

delay காலம் தாழ்த்து, சுணங்கு
delayed காலஇடையீடிட்ட, தவங்கிய
delegate பேராள், பேருரிமை, பதிலி, பேருரிமை தந்தனுப்பு
delegation பேராட் குழு, பதிலிக்குழு
deliberate ஆழ்ந்து ஆராய், வேண்டு மென்று செய்த ஆராய்ந்துசெய்த
delight மகிழ், மகிழ்ச்சி, களிப்பு
delimit எல்லைகுறி
delinquency நெறிபிறழ்வு
delinquent நெறிபிறழ்ந்த (வன்)
delirium சன்னி
delivery ஒப்படைப்பு, பேச்சுமுறை
delusion ஏமாற்றம், திரிபுணர்ச்சி
demarcation எல்லைக்குறிப்பு, எல்லைப்பாகுபாடு
dementia மனத்திறக் கேடு
demerit குறைபாடு, குற்றம்
democracy மக்கள் ஆட்சி
demonstration மெய்ப்பித்தல், செய்து காட்டல்
dendrites நரம்புக்கிளைகள்
denomination இனம்
denominational numbers இனவெண்கள்
denominator பகுதி, பகுதிஎண்
denotation குறிப்பீடு, பொருட்குறி, சுட்டுநிலை
dental பல்சார்ந்த, பல்லொலி
department துறை, பகுதி
dependency சார்பு
depersonalization ஆளுமைநீக்கம்
depict சித்திரி
depolarisation துருவத்துவம் நீக்கல், முனையம்நீக்கல்
deposit வைப்புத்தொகை
    caution எச்சரிக்கைத் தொகை
depository சேமிப்பிடம்
depression உட்குழிவு, தாழ்வு
depression mania மீர்ச்சோர்வுப்பைத்தியம்
depth ஆழம். ஆழமுடைமை
depth psychology ஆழ உளவியல்
deputation ஆட்பேர்க்குழு
deputy inspector துணை ஆய்வாளர்
derangement அமைதி குலைதல்
dereliction கைவிடல், தவறுதல்
derived instincts சார்பூக்கம்
dermis உட்புறத்தோல்
description விவரிப்பு
design திட்டம், கட்டமைப்பு, வரைவடிவம், நோக்கம்
designation பதவிப்பெயர்
desire அவா, விருப்பம்
desk சாய்வுமேசை
despair மனமுறிவு
despondency சோர்வு, ஊக்கமிழத்தல்
despotism கொடுங்கோன்மை
destination சேரிடம்
detachment பற்றின்மை
detachment, scientific பற்றின்றி ஆராயும் பண்பு
detail விவரம்
detect உளவறி, துப்பறி
detention நிறுத்திவைத்தல்
determinants உறுதிசெய்பவை
determination உறுதி, தீர்மானம்
determine உறுதிப்படுத்து
determinism ஊழ்வினைக்கொள்கை
deterrent தடை
deterrent theory தடைசெய் கொள்கை
development வளர்ச்சி, விருத்தி, உருத்துலக்கம்
    stage of வளர்ச்சிப்படி
developmental psychology வளர்ச்சி உளவியல்
deviation விலக்கம்
    average சராசரிவிலக்கம்
    mean இடைவிலக்கம்
    quartile கால்விலக்கம்
    standard தரவிலக்கம்
device பொறிஅமைப்பு, ஏற்பாடு
devotion ஈடுபாடு
dexterity நுண்திறமை
diagnose ஆய்ந்தறி
diagnosis ஆய்ந்தறிதல்
diagnostic ஆய்ந்தறி
diagonal மூலைவிட்டம்
diagram விளக்கப்படம்
    bar கட்டையுருவவிளக்கப்படம்
    line கோட்டுவிளக்கப்படம்
    scatter சிதறுகைவிளக்கப்படம்
diagraph படம்வரைத்துணையி, படம் வரையி
dial முகப்பு
dialect திசைப்பேச்சு, திசைவழக்கு
dialectic கருத்தாய்தல்
dialectics கருத்தாய்முறை

dialogue உரையாடல்
diameter விட்டம்
diaphragm இடைச்சவ்வு
diarchy இரட்டையாட்சி
diary நாட்குறிப்பு
dichotomy இருகூற்றுப்பிரிவு
dictate கட்டளையிடு
dictation சொல்வதெழுதல்
dictator வல்லாட்சியாளர்
dictatorial அடக்கு முறையான, வல்லாட்சி சார்ந்த
diction சொல்வளம்
dictionary அகரவரிசை, அகராதி
dictum ஆணை, உறுதிமொழி
didactic apparatus கற்பிக்கும் கருவிகள்
diet உணவு
difference வேற்றுமை
difference, individual தனியாள்வேற்றுமை
differential psychology வேற்றுமை உளவியல்
differential threshold வேறுபாட்டுவாயில்
differentiate வேற்றுமைப்படுத்து, [வகைப்படுத்து
diffusion பரவுதல்
digest செரி
digit விரலகம், இலக்கம்
digit - span test இலக்க வீச்சுச்சோதனை
dignity உயர்நிலை, மதிப்பு
digression மற்றொன்று விரித்தல், வழிவிலக்கல்
dilate விரியச்செய்
diligence விடாமுயற்சி
dilemma இருதலைக்கொள்ளிநிலை
dimension அளவு, முற்றளவு
diminishing return குறையும்பயன்
diphtheria தொண்டையடைப்பான்
diphthong இணையுயிர் எழுத்து
diploma கலைச்சான்று
dipsomania மதுத்தேட்டம்
direct இயக்கு, வழிகாட்டு, கட்டளையிடு, நேர்
directed numbers திசை எண்கள்
direct experience நேர் அனுபவம், நேர்பட்டறிவு
directions திசைகள், வழிகாட்டு குறிகள், ஆணைகள்
direct method நேர்முறை
director இயக்குநர்
Director of Public Instruction பொதுக் கல்வி இயக்குநர்

directorate இயக்குநர் குழு
directory தகவல் தொகுப்பு
disability ஆற்றற் குறை
disadvantage குறை, தீங்கு
disappointment ஏமாற்றம்
disapproval கண்டனம்
disarranged sentence test சொற்றொடர்ப் பிறழ்வுச் சோதனை
disbelief நம்பிக்கையின்மை
discernible பிரித்தறியக்கூடிய
disciple மாணுக்கன்
disciplinary கட்டுப்பாட்டு, ஒழுங்குமுறை பற்றிய
